Bishop George Rajendran SDB
D i o c e s e o f T h u c k a l a y

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

"With God all things are possible"

**Circular letter No/GR/09/2018**

# ஆயர் சுற்றுமடல்

**ஈசோ மெசியாவில் அன்பிற்குரிய அருட்தந்தையரே! அருட்சகோதரிகளே! அன்பு இறைமக்களே! நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அமைதியும் அருளும் உரித்தாகுக!**

## "நாட்டுக்காக எரிக்கோ பவனி"

இறையேசுவில் அன்பிற்குரியவர்களே,

இந்திய கத்தோலிக்க அருங்கொடை இயக்கத்தின் தேசிய பணிக்குழு, 2019 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் பாராளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு, நமது நாட்டுக்காகவும், எதிர்காலத்தில் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் நாட்டுத் தலைவர்களுக்காகவும் செபிப்பதற்காக சிறப்பான தொடர் பரிந்துரை மன்றாட்டுக்களை நாடு முழுவதும் முன்னெடுக்கப் பணித்துள்ளது.

இச்சீரிய முயற்சியின் தொடர்ச்சியாக, அகில இந்திய ஆயர் பேரவையின் ஆதரவுடன் நாடு தழுவிய "எரிக்கோ செபப் பேரணி" – யை தேசியப் பணிக்குழு நடத்தி வருகிறது. தமிழக ஆயர்களின் ஆசியுடன் அனைத்து மறைமாவட்டங்களையும் வலம் வரும் இப்பேரணியானது ஜீலை 28-இல் தொடங்கி ஆகஸ்ட் 18-இல் நிறைவடைகிறது. நமது மறைமாவட்டத்தில் எரிக்கோ பேரணியானது ஆகஸ்ட் 6, 2018 திங்கள்கிழமை அன்று மாலை 4.30 மணிக்கு பிலாங்காலை புனித குழந்தை தெரெசாள் மறைவட்ட ஆலயம் வந்தடைகிறது. தொடர்ந்து பின்வரும் கால அட்டவணைப்படியான நிகழ்வுகளும் நடைபெறும்.

மாலை 4.30 மணிக்கு : வரவேற்பு

மாலை 5.00 மணிக்கு : செபமாலை

மாலை 5.20 மணிக்கு : இறைப்புகழ்ச்சி

மாலை 5.40 மணிக்கு : எரிக்கோப் பவனி – ஓர் அறிமுகம்

மாலை 6.00 மணிக்கு : திருப்பலி - **மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**

இரவு 7.00 மணிக்கு : எரிக்கோப் பவனி

இரவு 7.45 மணிக்கு : பரிந்துரை செபம்
இரவு 8.10 மணிக்கு : நற்கருணை ஆராதனை
இரவு 8.30 மணிக்கு : இறுதி ஆசீர், நிறைவு

பிலாங்காலையில் வைத்து நடைபெறும் இந்நிகழ்வுகளில் அனைத்து அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் மற்றும் தக்கலை–பிலாங்காலை மறைவட்டத்துக்குட்பட்ட பங்குகளிலிருந்து அனைத்து மக்களும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அத்தோடு பிற பங்குகளின் பிரதிநிதிகளாக குறையாமல் 5 பேர் பங்கெடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து இப்பவனியானது நமது மறைமாவட்ட அனைத்து பங்குகளிலும் பயணிக்கும். பயணத் தேதி மற்றும் நேரம் பின்னர் உங்களுக்கு அறிவிக்கப்படும். நமது மறைமாவட்ட சீனாய் தியான இல்ல இயக்குநர் அருட்தந்தை மிஜோ செபாஸ்டின் அவர்கள் தலைமையேற்று இதை வழிநடத்துவார்கள். இதற்கு அனைத்து அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் இறைமக்களும் ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

என்றும் ஈசோ மெசியாவில்

ஆயர் இல்லம்
01.08.2018

BISHOP GEORGE RAJENDRAN sdb
Diocese of Thuckalay

**✠ மார் ஜார்ஜ் இராஜேந்திரன் SDB**
தக்கலை மறைமாவட்ட ஆயர்

---

**குறிப்பு:** இந்த சுற்றுமடலை ஆகஸ்ட் 5-ம் தேதி திருப்பலிக்குப்பின் உங்களுடைய பங்குகளில் வாசிக்க வேண்டும்.